AUGUST 2025 |VOL.2, ISSUE NO. 8

RMRL NEWSLETTER

A monthly bulletin of RMRL to educate, interpret, and inform

தமிழ் அறிவு வளாகத்தை கட்டியெழுப்பக் கை கொடுங்கள்

முனைவர் சுந்தர் கணேசன், இயக்குநர், RMRL

முதன்மைச் சொற்கள்: மு. க. ஸ்டாலின், ஜெ. ஜெயரஞ்சன், கால்கோள் விழா, தமிழ் அறிவு வளாகம்.

சென்னை தரமணியில் மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகத்தில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் செயல்பட்டுவந்த கட்டடம் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. தமிழ்ப் பண்பாடு, வரலாறு சார்ந்த மீள்கட்டமைப்புகளில் இந்நூலகம் மேற்கொண்டு வரும் செயல்பாடுகளை அங்கீகரிக்கும் விதமாக, நூலகச் செயல்பாடுகளின் அடுத்தக்கட்ட வளர்ச்சியாக, தமிழ்நாடு அரசு 30,000 சதுர அடி நிலத்தை இந்நூலகத்தின் விரிவாக்கத்திற்கு தற்போது வழங்கியுள்ளது. இந்த இடத்தில் தமிழ்ச் சமூகத்தின் பேரடையாளமாகத் தமிழ் அறிவு வளாகம் உருவாக உள்ளது தொன்மையான தமிழ் நூல்களையும் ஆவணங்களையும் பேணிப் பாதுகாத்து வரும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் உருவாக்க இருக்கும் தமிழ் அறிவு வளாகத்தின் கால்கோள் விழா, 03.07.25 அன்று நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள், தமிழ் அறிவு வளாகக் கட்டுமானப் பணியை காணொளிக் காட்சி மூலம் தொடங்கி வைத்தார். இது ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக வரலாற்றில் சிறப்புமிக்க தருணமாகும்.

இந்நிகழ்வில் நான் உட்பட மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தமிழ்நாடு அரசு திட்டக் குழுவின் துணைத் தலைவர் ஜெ. ஜெயரஞ்சன், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளையின் அறங்காவலர்களான

ஆர். பாலகிருஷ்ணன், மரியம் ராம், R. ராமசந்திரன், இந்திரன் ஆகியோரும் கட்டட வடிவமைப்பாளர் B. ராஜேந்திரன், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத் திட்டப்பணி இயக்குநர் இரா. பிரகாஷ் ஆகியோரும் உடனிருந்தனர்.

தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம்

தமிழின் வளமான கலைகளும் செழுமையான இலக்கியங்களும் ஏராளமான அறிவுச்செல்வங்களும் கடந்த 300 ஆண்டுகளில் புத்தகங்களாக மாற்றப்பட்டுள்ளன. அந்தப் புத்தகங்களைச் சரிவர பாதுகாத்து அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு அளிக்கும் பெரும்பணியைச் செய்துவருகிறது ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம். வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தோடு பயணிப்பது இதன் தனித்துவமான செயல்பாடாகும்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கிவரும் இந்நூலகம், தமிழ் அச்சு நூல்களுக்கான ஆவணக்காப்பகமாகவும் அருங்காட்சியகமாகவும் செயல்படுகிறது. 'ஒரு பண்பாட்டின் பயணம்', 'தமிழ் நடுகல் மரபு', 'தமிழ் இசை', 'சங்கச்சுரங்கம் தொடர் வரிசை' எனப் பல்வேறு பதிப்புகளின் மூலம் பரந்த உரையாடலை உருவாக்கியுள்ளது. சிந்துவெளி, சங்ககாலம் முதல் நிகழ்காலம் வரையிலான சமூகப் பண்பாடு தொடர்பான உரைகளின்வழி மக்களிடையே வரலாற்று விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

நூற்றுக்கும் மேற்பட்ட முனைவர் பட்ட ஆய்வுகள், ஆராய்ச்சி நூல்கள், கட்டுரைகள் உருவாக்குவதற்கு உறுதுணையாய் இருந்துவந்துள்ளது, வருகிறது. அறிவுபரவலாக்கத்தை, பண்பாட்டு மீட்டுருவாக்கத்தைச் சமூகக் கடமையாகக் கொண்டுச் செயல்படுகிறது.

தலைமுறைகளுக்கான பெரும்பணி

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் அமரர் ரோஜா முத்தையாவின் சேகரிப்புகளோடு, பல முக்கியமான தமிழ் ஆளுமைகளின் சேகரிப்புகளும் இணைந்து நூல்கள், இதழ்கள், துண்டுப் பிரசுரங்கள், திருமணப் பத்திரிகைகள், சுவரொட்டிகள், நாடக விளம்பரங்கள், இசைத்தட்டுகள், பாட்டுப் புத்தகங்கள் என ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆவணங்களை கொண்டுள்ளது. உலகளாவிய அனுபவங்களைக் கொண்டு நவீனத் தொழில்நுட்பங்களின் வழியாகப் புத்தகங்களை எண்ணிமப்படுத்தியும் பாதுகாத்தும் வருகிறது.

இங்கு சிந்துவெளிப் பண்பாட்டின் கூறுகளை ஆய்வு செய்ய சிந்துவெளி ஆய்வு மையம் செயல்பட்டு வருகிறது. அதன்வழி சிந்துவெளிப் பண்பாடு, தமிழ்நாட்டு அகழாய்வுகள் தொடர்பான உரையாடல்களை முன்னெடுத்து, தமிழ் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. இத்துடன் தமிழ்ப் பண்பாடு, சமூகம், நவீனத்துவத்தின் சமகாலப் போக்குகள் ஆகியவற்றை ஆராய்வதற்காகப் பொதுவியல் ஆய்வு மையம் நிறுவப்பட்டுள்ளது.

சுரங்கத்திலிருந்து அரங்கத்திற்கு

தமிழில் அச்சிடப்பட்ட முதல் திருக்குறள் (1812), சங்க இலக்கியங்களின் அச்சுப் பதிப்புகள் தொடங்கி, நவீன இலக்கியங்கள் வரை 300 ஆண்டுக் கால தமிழ் அச்சுப் பண்பாடு இங்கு பாதுகாக்கப்படுகிறது.

சிதிலமடைந்த நிலையில் இருக்கும் புத்தகங்களைச் சீர்செய்து, 200 முதல் 300 ஆண்டுகள் ஆயுளை நீட்டிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது.

நமது தொன்மையின் தொடர்ச்சியாக இருக்கும் அறிவுச் செல்வங்களை இயற்கை, செயற்கைப் பேரிடர்களில் இருந்து பாதுகாக்க நுண்படச் சுருள்களில் பதிவு செய்து 24 மணி நேரமும் கண்காணிப்பில் இயங்கும் குளிர்பதன அறையில் வைத்துப் பாதுகாக்கிறது.

உலகெங்கும் உள்ள அனைவரும் வாசிக்கும் வகையில், காப்புரிமை இல்லாத நூல்களையும் இதழ்களையும் கொண்டு மின்னூலகத்தை உருவாக்கியுள்ளது.

கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள், கண்காட்சிகளைத் தொடர்ச்சியாக ஒருங்கிணைத்து வருகிறது. youtube.com/rmrlchennai வழியாகக் காணலாம்.

'1000 காலத்துப் பரண்'

ஏப்ரல் 2025 முதல் வாரந்தோறும் '1000 காலத்துப் பரண்' என்ற தலைப்பில் ஆனந்த விகடனில் ஒரு தொடர் வெளிவந்து கொண்டிருக்கிறது. இதில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் உள்ள வளமான அறிவுச் செல்வங்கள் குறித்து எழுதி வருகிறார் வெ. நீலகண்டன். இதற்காக ஒவ்வொரு வாரமும் சிரத்தையுடன் நூலகத்தில் உள்ள வளங்களைத் தோண்டி, தோண்டி எடுத்துக் கொடுத்து வருகிறோம். இத்துடன் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை முன்னெடுக்கும் தமிழ் அறிவு வளாகம் குறித்தும் அதற்கான நன்கொடை குறித்தும் இந்த '1000 காலத்துப் பரண்' தொடரில் கவனப்படுத்தப்படுகிறது.

தமிழ் அறிவு வளாகம்

முப்பது ஆண்டுகால அனுபவத்தின் மூலமாக, தமிழ்ச் சமூகம் பெருமிதம் கொள்ளத்தக்க பண்பாட்டு மையமாகத் தமிழ் அறிவு வளாகத்தை (Tamil Knowledge Campus)

உருவாக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. நமது வரலாற்றை, மரபை அறிந்துகொள்ள விரிவான ஒரு பண்பாட்டுச் சுற்றுலா தலமாக தமிழ் அறிவு வளாகம் உருவாகவுள்ளது.

நமக்கென்று பாதுகாப்பான ஓரிடம்

ஆகப்பெரிய தமிழ் ஆளுமைகளின் சேகரிப்புகளுடன், வாசிக்கவும் குறிப்பெடுக்கவும் நவீன வசதிகளைக் கொண்ட நூலகம், தமிழ் அறிவு வளாகத்தின் மையமாக இருக்கும். பயனர்கள் தங்கி ஆய்வு செய்வதற்கான ஏற்பாடுகளும் உருவாக்கப்படும். அச்சுப் பண்பாட்டின் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

சிந்துவெளி ஆய்வு மையத்திற்கும் பொதுவியல் ஆய்வு மையத்திற்கும் தேவையான மிக விரிவான ஆய்வுசார் வசதிகள் உருவாக்கப்படும். சிந்துவெளி பொருள் விளக்கக்கூடம் இங்கு அமைக்கப்படும்.

பயிற்சிப் பட்டறைகள் நடத்துவதற்கான கலையரங்கம், வகுப்பறைகள், திறந்தவெளி அரங்கம், கண்காட்சி அரங்கம் ஆகியவற்றையும் உள்ளடக்கிப் பேரிடர்கள் பாதிக்காத, சுற்றுச்சூழலுக்கு உகந்த, பசுமைக்கூடமாகவும் தமிழ் அறிவு வளாகம் உருவாக்கப்படும்.

உலகத் தமிழர்களுக்கான மன்றம்

தமிழ்ச் சமூகப் பண்பாடு, தமிழின் அறிவுசார் செயல்பாடு முதலியவற்றை வளர்தெடுப்பதும் அவற்றினுள் அனைவரையும் இணைத்துச் செயல்படுவதும் தமிழர்கள் ஒவ்வொருவரின் கடமை. இதனை முன்னெடுக்கும் விதமாக உலகத் தமிழர்கள் அனைவரையும் உள்ளடக்கி, ‘தமிழ் அறிவு வளாக மேம்பாட்டுப் பேரவை’, என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

அயலகத் தமிழர்களோடு தமிழ்நாட்டின் பல விழுமியங்களுக்கான இணைப்புப் பாலமாக இருந்து, தமிழ்ப் பண்பாட்டை உலக அரங்கில் காட்சிப்படுத்த, ‘தமிழ் அறிவு வளாக மேம்பாட்டுப் பேரவை‘ முன்நின்று செயல்படும்.

கட்டியெழுப்பக் கை கொடுங்கள்!

தமிழ் அறிவு வளாகத்தைக் கட்டியெழுப்ப தமிழ்நாடு அரசு 30,000 சதுர அடி நிலம் வழங்கியுள்ளது.



தமிழ் அறிவு வளாகத்தின் மாதிரி வடிவமைப்பின் ஒருபுறம்

தமிழ் அறிவு வளாகம் என்னும் பெருங்கனவை நனவாக்க நமக்கு 40 கோடி ரூபாய் தேவை. தனி நபர்கள், கொடையாளர்கள், பெருநிறுவனங்கள், அறக்கட்டளைகள், தொண்டு நிறுவனங்கள் தமிழ் அறிவு வளாகத்துக்கு தங்களால் இயன்ற நன்கொடையை வழங்கி வருகின்றனர்.

தமிழ்ச் சமூகத்தின் பேரடையாளமாக உருவாகப்போகும் இந்த அரிய பணியில் நீங்களும் இணைவது செயல்பாடுகளை வலுப்படுத்தும். சிறிதோ, பெரிதோ நீங்கள் வழங்கும் கொடை, நம் மனங்கள் இணைவதே முக்கியம்.

வாருங்கள்...

எல்லோரும் கைகோத்து நம் வரலாற்றைக்

காலத்தில் நிறுவுவோம்!

AUGUST 2025 |VOL.2, ISSUE NO. 8

புத்தகத் தொழிலில் நாற்பது ஆண்டுகள்

முனைவர் சே. தனபால், ஆய்வாளர், RMRL

முதன்மைச் சொற்கள்: கண. முத்தையா, புத்தகத் தொழில், நூல் பண்பாடு, நூலகச்சட்டம்

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் – ஜூன் 1946ஆம் ஆண்டு கண. முத்தையா (1913 -1997) 'தமிழ்ப் புத்தகாலயம்' என்ற பதிப்பகத்தை நிறுவினார். அவரின் காலத்தில் தமிழ்நாட்டின் முன்னணிப் பதிப்பகங்களில் ஒன்றாகத் தமிழ்ப் புத்தகாலயத்தை மாற்றினார். குறிப்பாக புத்தகங்களை வெளியிடும் செயல்பாட்டைத் தொழிலாக மேற்கொள்வதிலும் புத்தங்களைத் தேர்ந்தெடுத்து வெளியிடுதல் சார்ந்த சிந்தனையிலும் தனித்தன்மையைக் கொண்டிருந்தார் கண. முத்தையா. தமிழில் நூல் பண்பாடு (Book culture) என்ற பரந்த பொருண்மையில் தமிழ்ப் புத்தகத் தொழில் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. தமிழ்ப் புத்தகத் தொழில் வரலாற்றிலும் கண. முத்தையா முக்கியமான இடத்தைக் கொண்டுள்ளார். அதன்படி தமிழ்ப் புத்தகத் தொழில் குறித்து கண. முத்தையாவிற்கு எத்தகைய பார்வை இருந்தது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் இக்கட்டுரை அமையப் பெறுகிறது. இதன் ஊடாகத் தமிழ்ப் புத்தகத் தொழிலின் ஒரு குறிப்பிட்ட காலம் பற்றிய ஒரு சிறிய பார்வையை உண்டாக்க முயல்கிறது இக்கட்டுரை.

1947க்கு முந்தைய பதிப்புலகம்

'சுதந்திரப் போராட்ட காலத்துப் பதிப்பகங்கள்' என்ற தலைப்பில் 'தீபம்' பத்திரிகைக்கு 1971ஆம் ஆண்டு ஒரு கட்டுரையை கண. முத்தையா எழுதினார். அதில் சுதந்திரப் போராட்டக் கட்டத்தின் இறுதி கால் நூற்றாண்டு காலத்தை மட்டும் கணக்கில் கொண்டு, அக்காலத்திய பதிப்பகங்களின் நிலையை எடுத்துரைத்துள்ளார். அதற்கு நாட்டின் விடுதலை இயக்கதோடு தொடர்புடைய பதிப்பகங்கள், தொடர்பில்லாத பதிப்பகங்கள் என்று இரண்டாகப் பிரித்துப் பேசுகிறார்.

நாட்டின் விடுதலையோடு தொடர்பில் இல்லாத மாக்மில்லன், ஓரியன்ட் லாங்மன்ஸ் என்ற வெளிநாட்டு நிறுவனங்கள், குமாரசாமி நாயுடு அண் சன்ஸ், இ. எம். கோபலகிருஷ்ணக்கோன் போன்ற உள்நாட்டு நிறுவனங்கள் மட்டுமே தொழில்சார்ந்த பதிப்பகங்கள் என்ற நிலையைக் கொண்டிருந்தன. விடுதலை இயக்கதோடு தொடர்பில் இருந்த ஜி. ஏ. நடேசன் கம்பெனி,

சங்கு கணேசன் வெளியீடு, தமிழ் முனிவர் திரு.வி.க.வின் முருகவேள் புத்தகசாலை, சக்தி காரியாலயம், தமிழ்ப் பண்ணை ஆகிய பதிப்பகங்கள் தொழில் நிலையில் பதிப்பகங்களாக இல்லை என்று குறிப்பிடுகிறார். அக்கட்டுரையில் இந்த ஐந்து பதிப்பகங்களை மட்டும் எடுத்துக் கொண்டு இவற்றில் வெளியான புத்தகங்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறார். இவை சுதந்திர வேள்வியில் வெந்து சாம்பலாகின, ஆனால் இவற்றின் பங்களிப்பு மகத்தானது என்றும் குறிப்பிடுகிறார். அதாவது விடுதலைப் போராட்டத்திற்கு முன்பு பதிப்புத் துறை என்பது பெரும்பாலும் சேவைத் துறை என்ற தன்மையிலேயே செயல்பட்டது என்கிறார். இக்குறிப்பிட்ட

காலத்தில் இருந்த மற்ற திராவிட, கம்யூனிச இயக்கப் பதிப்பகங்களைப் பற்றிய தகவல்கள் எதையும் அவர் எடுத்துக் கொள்ளவில்லை.

இரண்டாம் உலகப் போரின் முடிவும் தமிழ்ப் புத்தகாலயத்தின் தோற்றமும்

இரண்டாம் உலகப் போரின் காரணமாக இந்தியாவில் ஏற்பட்ட பணவீக்கம் தமிழ்ப் புத்தக வியாபாரத்திற்குச் சிறு பலனை உண்டாக்கியது. ராணுவத்தினரின் பொழுதுபோக்கிற்காக நூலகங்களை ஏற்படுத்தும் திட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்ததால், தமிழ்ப் புத்தங்கள் அதிக அளவில் விற்பனையாக வசதி உண்டாகியது என்கிறார். இக்காலக்கட்டத்தில் புத்தக வியாபாரம் கொஞ்சம் சுறுசுறுப்படையவே பல புதிய வெளியீட்டு நிறுவனங்கள் தோன்றின. தமிழ்ப் புத்தகாலயம் உட்பட ஸ்டார் பிரசுரம். தமிழ்ப் பண்ணை, ஜோதி நிலையம், முல்லைப் பதிப்பகம், பாரி நிலையம் போன்ற பல நிறுவனங்கள் இதன் பின்னணியில் தோன்றியதாகக் குறிப்பிட்டுள்ளார் கண. முத்தையா. தமிழ்ப் புத்தகாலயத்தின் தோற்றத்தின் பின்புலத்தில் இத்தகைய வரலாற்றுப் பின்னணியும் இருப்பது கவனிக்கத்தக்கது. இத்துடன் தமிழ்ப் புத்தகாலயம் எத்தகைய பின்னணியில் தோற்றுவித்தார் என்பது அவரது வரிகளில் பின்வருமாறு:

> 1946-மே முதல் வாரத்தில் யுத்தக்கைதியாக நான் இந்தியா வந்தபோது பர்மாவிலிருந்த சொத்து முழுவதையும் இழந்து விட்டு வெறும் ஆளாகவே வந்து சேர்ந்தேன். சென்னை வந்ததும் முதல் வேலை பிழைப்புத் தேடுவதாய் இருந்தது.
>
> எனது படிப்பிற்கு இங்கு ஒரு நல்ல வேலை கிடைக்காது. மேலும் சிறுவயதிலிந்தே நான் ஒரு வியாபாரியாக வளர்க்கப்பட்டு ஒரு வியாபாரியாகவே வாழ்ந்தவன். ஏதாவது ஒரு தொழில் தொடங்க நினைத்தேன். நண்பர்கள் 'சக்தி காரியாலயம்' திரு. வை. கோவிந்தன் அவர்களும் 'குமரி மலர்' திரு. A. K. செட்டியார் அவர்களும் புத்தகக்கடை தொடங்கும்படியும் தாங்கள் உதவுவதாகவும் யோசனை கூறினார்கள். போதுமான மூலதனம் இல்லாத நிலையில் ஒரு வருடம் கழித்து வரப்போகிற ஒரு தொகையை நம்பி எனது கூட்டாளி (Partner) திரு. ஆ. பழ. சொக்கலிங்கம் அவர்கள் தந்த சிறு தொகையை வைத்துக் கொண்டு புத்தகத் தொழிலைத் தொடங்கினேன்.



கண. முத்தையா

மேலே குறிப்பிட்ட தமிழ் புத்தகங்களின் அதிகமான விற்பனை புத்தகத் தொழில் தொடங்கி நடத்துவதற்கான சூழல் உண்டாக்கி இருந்தது. வியாபாரியாகவே வளர்ந்த கண. முத்தையா இத்தொழிலில் ஈடுபடுவது சரியாக இருக்குமெனத் தீர்மானித்துள்ளார். இத்துடன் ஏற்கனெவே பர்மாவில் இருக்கும்போது நஷ்டத்தில் இயங்கிய 'ஜோதி' இதழின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று இலாபகரமாக நிலைக்குக் கொண்டு வந்துள்ளார். அந்த அனுபவம் அவருக்குப் பதிப்பகத் தொழிலில் கை கொடுத்துள்ளது. குறிப்பாக அரசியல் பத்திரிகையாக இருந்ததை, இலக்கியங்களைச் சேர்த்து அதன் வடிவத்தை மாற்றி பரவலாக்கம் செய்துள்ளார். ஒரு வகையில் அவரின் பதிப்பகத் தொழிலும் அவரின் வெளியீடுகளில் அரசியல், இலக்கியம் இரண்டும் சேர்ந்து இயங்கும் போக்கு இருந்துள்ளதைக் காணலாம்.

விடுதலைக்குப் பிறகான பதிப்பகங்களின் நிலைமை

1956ஆம் ஆண்டு 'சரஸ்வதி' இதழில் 'தமிழ்ப் புத்தக வியாபாரம்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதினார். 1949–50களில் ஏற்பட்ட வியாபார மந்தம் புத்தக வியாபாரத்தையும் பாதித்தது. பல சிறிய பதிப்பக நிறுவனங்கள் நஷ்டத்தைத் தாங்க முடியாமல் மூடப்பட்டன. இந்த நிலையில் அரசாங்கம் நூலகச் சட்டத்தை நிறைவேற்றியது. தமிழ்நாடு முழுவதும் புதிய நூலகங்கள் உருவாகப்பட்டன. பள்ளிதோறும் நூலகங்கள் ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டது. பொதுநிதியிலிருந்து பெரும் பணம் நூலகங்களுக்குக் கொடுத்து,

ஊக்குவிக்கப்பட்டது. புத்தகத் தொழில் நல்ல நிலையை எட்டிய, அதே நேரத்தில் அதற்கு பெருங்கேடும் இதனூடே ஏற்பட்டது என்று கண. முத்தையா குறிப்பிடுகிறார்.

அதாவது நூலக நிர்வாகிகளும் பள்ளிக்கூட ஆசிரியர்களுமே புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வாங்குவதால், அவர்கள் புத்தகத்தின் தன்மை, புத்தகத்தினால் வாசகர்களுக்கு ஏற்படக்கூடிய பயன் உள்ளிட்டவற்றைச் சிந்திப்பதில்லை என்கிறார். அவர்கள் மாவட்ட கல்வியதிகாரி அல்லது ஆடிட்டர் ஆட்சேபணை செய்யக்கூடாது என்பதை மனதில் வைத்தே புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இதனால் வாசகர்களுக்குப் பயனேதும் இல்லை என்கிறார். இத்துடன் புத்தக விற்பனை குறித்து அக்கட்டுரையில் குறிப்பிடுவது பின்வருமாறு,

> ‘வாசகர்கட்குப் பயன்படுதல்’ என்ற நிலைமை மாறி ‘அதிகாரிகளின் ஆட்சேபணைக்குள்ளாகாதது’ என்ற நிலைதான் விற்பனைக்கு முக்கியம் என்று ஏற்பட்டுவிட்டதால், தமிழுக்குத் தேவையுள்ள பல விஷயங்கள் வெளிவராத நிலைமையில் தேவையற்ற ஒரே விஷயம் திரும்பத் திரும்ப பல புத்தகங்களில் வந்துகொண்டிருக்கிறது. இந்த நிலை தமிழ் இலக்கிய வளர்ச்சியை மட்டும் பாதிக்கவில்லை. வாசகர்களின் மனதையும் சோர்வடையச் செய்கிறது.

1946இல் தமிழ்ப் புத்தகாலயம் தொடங்கிய பின்னர் பத்தாண்டுகளில் தமிழ்ப் புத்தகத் தொழில் சார்ந்து நடைபெற்ற சிக்கல்களை இவற்றின்வழி ஒருவாறு ஊகித்து அறியலாம். தமிழ்ப் புத்தகத் தொழிலில் ஒருபுறம் வளர்ச்சியை நோக்கி நகர்ந்தாலும் அரசு அதிகாரிகளின் இடையீடு ஒரு சிக்கலாக எழுந்துள்ளது. அது இன்றும் தொடர்ந்து இருந்து வருகிறது.

1960களில் தமிழ்ப் புத்தகத் தொழில்

1966ஆம் ஆண்டு தீபம் இதழுக்கு, ‘புத்தகத் தொழிலும் அதன் எதிர்காலமும்’ என்றொரு கட்டுரையை கண. முத்தையா எழுதினார். அதில் வாசகர்கள் நேரடியாகப் பணம் கொடுத்து, புத்தகம் வாங்கிப் படிக்கும் பழக்கம் இக்காலக்கட்டத்தில் குறைந்து விட்டதாகக் குறிப்பிடுகிறார். இதனால் புத்தகத் தொழில் முழுவதும் நூலகங்களையும் பிற பொது நிறுவனங்களையும் நம்பி இருக்க வேண்டிய நிலை உண்டாகி விட்டதாகவும் அதனால் தமிழ்ப் புத்தகத் தொழிலில் போட்டிகள் உருவாகி, உற்பத்தியில் தரக்குறைவும் ஏற்பட்டுள்ளதாகக் கூறுகிறார்.



புத்தகத் தொழிலுக்கான சந்தை என்பது இயற்கையாக உருவான சந்தையாக இல்லாமல், அரசாங்கத்தின் நிதிநல்கையையும் நன்கொடையையும் நம்பியிருக்கும் சந்தையாக மாறியுள்ளது என்றும் வருத்தப்படுகிறார். மற்றொரு புறத்தில் அரசாங்கக் கல்வித்துறையும் நூலக இயக்கங்களும் அதிக கவனம் செலுத்தியும்கூட மக்களிடையே படிக்கும் பழக்கம் வளரவில்லை. மக்களிடையே படிக்கும் பழக்கம் அதிகரித்தால்தான் புத்தகத்திற்கான நிரந்தர சந்தை ஏற்படும். அப்போதுதான் புத்தகத் தொழில் வளர்ச்சியும் ஏற்படும் இலக்கிய வளர்ச்சியும் ஏற்படும் என்கிறார்.

1972ஆம் ஆண்டு ‘தீபம்’ இதழில், ‘இலக்கிய வளர்ச்சி’ என்னும் தலைப்பில் கட்டுரை எழுதிய கண. முத்தையா. அதில் இலக்கியத்தின் வளர்ச்சியில் பதிப்பாளர்களின் நிலையை எடுத்துரைத்துள்ளார். அது பின்வருமாறு,

> பதிப்பாளர்கள் எவ்வளவு முயன்றாலும் சிறந்த இலக்கியங்களைப் படைத்து அளித்துவிட முடியாது. எழுத்தாளர்கள் தாம் அந்தச் சாதனையைப் புரியவேண்டும். பதிப்பாளர்கள் இலக்கியத்தின் செவிலித் தாயார்களே. ஆயினும் செவிலியருக்கும் பொறுப்பும் கடமையும் உண்டு. அவர்களால் நல்ல இலக்கியங்களைப் படைக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் படைக்கப் பெற்ற சிறந்த இலக்கியங்களைப் பாழாக்காமல் காப்பது அவர்கள் கடமையேயாகும். நல்லவற்றைக் காப்பது மட்டுமல்ல தீயவை மலிந்து நல்லனவற்றை மூழ்கடித்து விடாமல் தடுப்பதும் பதிப்பாளர் கடனே. நல்லவற்றைத் தரம் அறிந்து உலகிற்கு எடுத்துக் கூறி உயர்த்துவதும் பதிப்பாளர் பொறுப்பே. இந்தப் பெரும் பொறுப்புகளை உணர்ந்து இன்றையப் பதிப்பாளர்கள் எவ்வளவு தூரம் செயல்படுகிறார்கள் என்பதே சிந்தனைக்குரிய விஷயம்.

1970களில் தமிழ்ப் புத்தகத் தொழில்

1977ஆம் ஆண்டு ‘தீபம்’ இதழில், ‘இந்தியாவில் புத்தக வெளியீடு’ என்றொரு கட்டுரை எழுதியுள்ளார். அக்காலக்கட்டத்தில் இந்திய அரசு காப்புரிமைச் சட்டம் நிறைவேற்றியது, பதிப்பாளர்களுக்கு வருமான வரியில் 20 சதவிகிதம் சலுகை அளித்தது ஆனாலும் இந்தியாவில் புத்தக விற்பனை கவலையளிப்பதாகக் குறிப்பிடுகிறார். புத்தக விற்பனையை மூன்று நிலைகளாகப் பிரிக்கிறார். அவை,

1. பாடநூல்கள், மக்களின் பலவீனங்களைப் பயன்படுத்தக்கூடிய சோதிட நூல்கள், பாலுணர்வைத் தூண்டும் நூல்கள் அதிக எண்ணிக்கையில் விற்பனையாகின்றன.
2. நல்ல படைப்பிலக்கியங்களும் மதச்சார்புள்ள நூல்களும் நடுத்தரமான விற்பனை எல்லையைப் பிடிக்கின்றன.
3. ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டக்கூடிய நூல்களும் அறிவியல் நூல்களும் மிகக் குறைவாகவே விற்பனையாகின்றன.

இத்துடன் நல்ல படைப்பிலக்கியங்களும் புதினங்களும் விற்பனையில் மிகமிகக் குறைவாக இருப்பது ‘இந்தியாவின் தனித்தன்மை’ என்று குறிப்பிடுகிறார்.

இறுதியாக

கிட்டதட்ட 40 ஆண்டுகள் புத்தகத் தொழிலில் ஈடுபட்ட கண. முத்தையா, தமிழ்ப் புத்தகத் தொழில் வரலாற்றில் தனக்கென்று தனி இடத்தை உருவாக்கினார். ஒவ்வொரு பத்தாண்டுகளிலும் புத்தகத் தொழில் குறித்த தனது பார்வையையும் புத்தகத் தொழிலில் ஏற்பட்ட மாற்றங்களையும் தொடர்ந்து இதழ்களில் பதிவு செய்து வந்துள்ளார். அவற்றின் சில குறிப்பிட்ட கூறுகளை மட்டுமே மேலே தொகுத்தளித்துள்ளோம். அவர் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து விதங்களும் அதன் சமூகத் தேவைகளும் அதையொட்டிய உரையாடல்களும் என அவரின் பதிப்புப் பணிகள் தனியாகவே பார்க்க வேண்டும்.

1985ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தகாலயத்தின் நிர்வாகப் பொறுப்பிலிருந்து விலகி ஓய்வுபெற்றறார் கண. முத்தையா. அவரின் வாழ்க்கை வரலாறு, ‘முடிவுகளே தொடக்கமாய்...’ என்ற பெயரில் 1997ஆம் ஆண்டு வெளியானது. அதில் தமிழ்ப் புத்தகாலயத்தின் தோற்றம் குறித்தும் அவரது பதிப்புப் பணிகள் குறித்தும் விரிவாகப் பேசியுள்ளார். புத்தகத் தொழிலோடு தொடர்புடைய பல நினைவுகளை அதில் பகிர்ந்துள்ளார். அதில் இரண்டு தகவல்களை மட்டும் இங்கே குறிப்பிடலாம். அவை நேரடியாக இக்கட்டுரையின் பொருண்மையோடு தொடர்புடையவை.

ஒன்று, 1958–59களில் சோவியத் யூனியன் இந்தியாவில் ரஷ்ய நூல்களை வெளியிடக் கொண்டு வந்த திட்டத்தைப் பற்றியது. இந்தத் திட்டத்தின்படி இந்தியப் பதிப்பாளர்கள்

விரும்பும் ரஷ்ய நூல்களை மொழிபெயர்த்து வெளியிட ஆகும் செலவு முழுவதையும் சோவியத் யூனியன் வட்டியில்லாக் கடனாகக் கொடுக்கும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ரஷ்ய பதிப்பத்தின் இயக்குநர் – இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலில் – தமிழ்நாட்டில் தமிழ்ப் புத்தகாலயம் உட்பட ஐந்து உள்ளூர் பதிப்பாளர்களையும், ஒரு வெளியூர் பதிப்பாளரையும் அழைத்துப் பேசியுள்ளார். இத்திட்டத்தை நான்கு உள்ளூர் பதிப்பாளர்களும் ஒப்புக்கொள்ள, கண. முத்தையா மட்டும் மறுத்துள்ளார். அவரை, ரஷ்ய இயக்குநர் தனியாக அழைத்து, “நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் தொடங்குவதற்கு முன்பே நீங்கள் ரஷ்யாவின் அரசியல் தொடர்புடைய பல நூல்களையும், கம்யூனிச தத்துவ நூல்களையும் விரும்பி வெளியிட்டிருக்கிறீர்கள். இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டால் இன்னும் பல பெரிய நூல்களை வெளியிட முடியுமே ஏன் மறுக்கிறீர்கள்?” என்று கேட்டுள்ளார். அதற்கு கண. முத்தையா, “அந்த நூல்களை நாங்கள் வெளியிட்ட போது கம்யூனிஸ்ட் கட்சிக்காகவோ, சோவியத் யூனியனுக்காவோ வெளியிடவில்லை. எங்கள் நாட்டு மக்களுக்கு அறிவு வளரும் என்ற நம்பிக்கையில் வெளியிட்டோம். இப்போது உங்களிடம் பணம் பெற்றுப் புத்தகம் வெளியிட்டால் அது எங்களின் நல்ல நோக்கத்தைக் குறைத்துவிடும்” என்று கூறியதாக தனது வாழ்க்கை வரலாற்றில் பதிவுசெய்துள்ளார். இது ஒரு தொழில் நடத்தும்போது தொழில்சார்ந்த நிலையில் எத்தகைய தன்மையில் அவர் நடந்து கொண்டார் என்பதைக் காட்டுகிறது.

இரண்டாவது, புத்தகத் தொழிலில் எது அவருக்கு இலாபம் தரக்கூடியதாக இருந்துள்ளது என்பதைப் பற்றியதாகும். இவர் புத்தகத் தொழிலில் ஈடுபட்ட காலத்தில் சக்தி காரியாலயம், திரு.வி.க வின் முருகவேள் புத்தக நிலையம் ஆகியவற்றையே முன் மாதிரியாகக் கொண்டு செயல்பட்டுள்ளார். இருப்பினும் தொடக்கத்தில் பெரும்பாலும் அரசியல் சம்பந்தபட்ட நூல்களையும் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் இலக்கிய ஆராய்ச்சி நூல்களையும் அதிகமாக வெளியிட்டார். ஆனால் தனது வாழ்க்கை வரலாற்று நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்,

> தமிழ்ப் புத்தகாலயம் தொடங்கிய காலத்தில் அதிகமாக அரசியல் சார்புள்ள நூல்கள்- கூடுமானவரை குறைந்த விலையில் வெளியிடவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் செயல்பட்டது. ஆனால் இன்று நான் நினைத்துப் பார்க்கும் போது, எந்த அறிவியல் பொருள்களோ, அரசியல் கருத்துகளோ நிற்பதைவிட இலக்கியத் தரமான நூல்கள் தான் நிலைத்து நிற்பதைக் காண்கிறேன்.

இவ்வார்த்தைகள் – அரசியல், அறிவியல் நூல்களைவிட இலக்கியத் தரமான நூல்கள் தொழில் ரீதியாக அவருக்கு உகந்ததாக இருந்துள்ளதைக் காட்டுகின்றன. இவை இரண்டும் அவர் தமிழ்ப் புத்தகத் தொழில் மேற்கொண்ட விதத்தைக் காட்டுகின்றன. இறுதியாக, கண. முத்தையாவின் புத்தகத் தொழில் நோக்குநிலை அவர் சொற்களில் பின்வருமாறு,

> எந்தத் தொழிலுக்கும் லாபம் இன்றியமையாதது. ஆனால் லாபத்தை அடைவதற்கும் வியாபார நேர்மையும் பொறுப்புணர்ச்சியும் அவசியம். புத்தகத் தொழிலிலோ பொறுப்புணர்ச்சி மிகமிக அதிகமாக வேண்டும்.

உதவிய நூல்கள்

1. முத்தையா, கண. (1998). முடிவுகளே தொடக்கமாய்.... 2ஆம் பதிப்பு. சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்.
2. முத்தையா, கண., அகிலன் கண்ணன். (2006). பதிப்பும் படிப்பும். சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்.
3. முத்தையா, கண. “இந்திய தேசிய இராணுவத்திலிருந்து...தமிழ்ப் புத்தகாலயம்” நேர்காணல்: சூரியசந்திரன். Accessed July 23, 2025. https://bookday.in/gana-muthaiya-interview/

கோலன் வகைப்பாடு

(Colon Classification)

இரா. பிரகாஷ், திட்டப்பணி இயக்குநர், RMRL

முதன்மைச் சொற்கள்: எஸ். ஆர். ரங்கநாதன், PMEST, தகவல் மீட்டெடுப்பு, பகுப்பாய்வு-தொகுப்பு

நூலக வகைப்பாடு என்பது நூலகங்களில் உள்ள புத்தகங்களை ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறையில் அமைத்து, அவற்றை எளிதாகக் கண்டறியும் முறையாகும். 19 ஆம் நூற்றாண்டு நூலக வகைப்பாட்டு வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இக்காலத்தில் தான் விரிவான, தர்க்கரீதியான வகைப்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

சார்லஸ் ஏ. கட்டர் (1837-1903) என்ற அமெரிக்க நூலகர் எக்ஸ்பான்சிவ் கிளாசிஃபிகேஷன் (Expansive Classification) என்ற வகைப்பாட்டை உருவாக்கினார். இது நூல்களை தலைப்புகள் மற்றும் துணைத்தலைப்புகளின் படி விரிவாக வகைப்படுத்தியது. அவரது முறை, சிறிய நூலகங்களிலிருந்து பெரிய பல்கலைக்கழக நூலகங்கள் வரை விரிவுபடுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டது. இது ஒவ்வொரு பிரிவிற்கும் அகரவரிசை குறிகாட்டிகளைப் பயன்படுத்தியது.

அமெரிக்க நூலகர் மெல்வில் டூவி (1851-1931), "டூவி தசம வகைப்பாடு" (Dewey Decimal Classification - DDC) திட்டத்தை 1876 இல் வெளியிட்டார்.இந்த வகைப்பாட்டில் அனைத்து பாடங்களும் 10 முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் 10 துணைப்பிரிவுகளாகவும், மேலும் ஒவ்வொன்றும் 10 உட்பிரிவுகளாகவும் பிரிக்கப்படுகின்றன. இது தொடர்ந்து திருத்தப்பட்டு, விரிவாக்கப்பட்டு வருகிறது. இது உலகளவில் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் நூலக வகைப்பாட்டுத் திட்டமாகும்.

நூலகக் காங்கிரஸ் வகைப்பாடு (Library of Congress Classification - LCC): அமெரிக்க நூலகக் காங்கிரஸால் உருவாக்கப்பட்ட LCC, டூவி தசம வகைப்பாட்டை விட விரிவான மற்றும் ஆழமான ஒரு திட்டமாகும். இது பெரிய கல்வி மற்றும் ஆராய்ச்சி நூலகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது

உலகளாவிய தசம வகைப்பாடு (Universal Decimal Classification - UDC): பால் அட்லெட் மற்றும் ஹென்றி லா ஃபோன்டைன் ஆகியோரால் உருவாக்கப்பட்ட UDC, DDC ஐ



அடிப்படையாகக் கொண்டது ஆனால் மேலும் விரிவானது மற்றும் பன்னாட்டுப் பயன்பாட்டிற்கு ஏற்றது. இது பல மொழிகளில் கிடைக்கிறது மற்றும் பல அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

கோலன் வகைப்பாடு (Colon Classification - CC): இந்திய நூலக அறிவியலாளர் எஸ். ஆர். ரங்கநாதன் அவர்களால் உருவாக்கப்பட்ட கோலன் வகைப்பாடு, பகுப்பாய்வு-இணைப்பு (Analytico-Synthetic) முறையை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு நூலும் ஆளுமை, பொருள், ஆற்றல், இடம் மற்றும் காலம் (Personality, Matter, Energy, Space, Time - PMEST) என பிரிக்கப்பட்டு, பின்னர் இணைக்கப்படுகிறது. இந்த முறை, மிகவும் துல்லியமான மற்றும் பலதரப்பட்ட உள்ளடக்கங்களைக் கொண்ட நூல்களை வகைப்படுத்த உதவுகிறது. இது இந்தியாவில் சில நூலகங்களில் குறிப்பிடத்தக்க அளவில் பயன்படுத்தப்படுகிறது.

கோலன் வகைப்பாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

முனைவர் எஸ். ஆர். ரங்கநாதன், நூலகங்களில் நூல்களை வகைப்படுத்துவதில் இருந்த சிக்கல்களை உணர்ந்து, ஒரு தர்க்கரீதியான, நெகிழ்வான அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கோலன் வகைப்பாட்டை வடிவமைத்து, 1933ஆம் ஆண்டு வெளியிட்டார். கோலன் வகைப்பாடு, மற்ற வகைப்பாட்டு முறைகளிலிருந்து வேறுபட்டு, ஒரு புதிய அணுகுமுறையை அறிமுகப்படுத்தியது. இது 'பகுப்பாய்வு-தொகுப்பு' (Analytico-Synthetic) முறையின் அடிப்படையில் அமைந்திருந்தது. அதாவது ஒரு நூலின் உள்ளடக்கத்தைப் பல அடிப்படைப் பண்புகளாகப் பிரித்து, பின்னர் அவற்றை ஒரு குறிப்பிட்ட வரிசையில் இணைத்து ஒரு வகைப்பாட்டு எண்ணை உருவாக்குதல் பகுப்பு–தொகுப்பு அணுகுமுறையாகும்.

PMEST சூத்திரம்: கோலன் வகைப்பாட்டின் மையம்

கோலன் வகைப்பாட்டின் மிக முக்கியமான அம்சம் அதன் 'PMEST' (Personality, Matter, Energy, Space, Time) என்ற சூத்திரமாகும். இது ஒரு நூலின் உள்ளடக்கத்தை ஐந்து அடிப்படைப் பண்புகளாகப் பிரித்து வகைப்படுத்துகிறது:

ஆளுமை (Personality - P): இது ஒரு நூலின் முக்கியக் கருப்பொருள் அல்லது மையப் பொருளைக் குறிக்கிறது. உதாரணமாக, 'மருத்துவம்' என்ற நூலில் 'மனித உடல்' அல்லது 'நோய்' ஆளுமையாக இருக்கும்.

பொருள் (Matter - M): இது ஆளுமையின் பண்புகள், பொருட்கள் அல்லது செயல்பாடுகளைக் குறிக்கிறது. உதாரணமாக, 'மருத்துவம்' என்ற நூலில் 'மருந்துகள்' அல்லது 'சிகிச்சை முறைகள்' பொருளாக இருக்கும்.

ஆற்றல் (Energy - E): இது ஒரு செயல்பாடு, செயல்முறை அல்லது சிக்கலைக் குறிக்கிறது. உதாரணமாக, 'மருத்துவம்' என்ற நூலில் 'அறுவைசிகிச்சை' அல்லது 'ஆய்வு' ஆற்றலாக இருக்கிறது.

இடம் (Space - S): இது ஒரு புவியியல் இருப்பிடத்தைக் குறிக்கிறது. உதாரணமாக, 'இந்தியா', 'தமிழ்நாடு' போன்றவை.

காலம் (Time - T): இது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியைக் குறிக்கிறது. உதாரணமாக, '20 ஆம் நூற்றாண்டு', 'நவீன காலம்' போன்றவை.

இந்த ஐந்து அடிப்படைப் பண்புகளைச் சுட்டும் P, M, E, S, T என்ற குறியீடுகளை, ஒரு குறிப்பிட்ட வரிசையில் முக்காற் புள்ளியை (:) கொண்டு இணைத்து ஒரு முழுமையான வகைப்பாட்டு எண் உருவாக்கப்படுகிறது.

உதாரணமாக, 'இந்தியாவில் 20ஆம் நூற்றாண்டில் இதய அறுவை சிகிச்சை' என்ற நூலுக்கு, L4417:6N.44 என்பது இதன் நூல் வகைப்பாடு எண்

L – மருத்துவம்

4417 – இதய அறுவை சிகிச்சை

6N – 20ஆம் நூற்றாண்டு

44 – இந்தியா

கோலன் வகைப்பாட்டின் சிறப்பம்சங்கள்

- **நெகிழ்வுத்தன்மை மற்றும் தகவமைப்பு:** PMEST சூத்திரம் நூல்களின் உள்ளடக்கத்தை மிக நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்ய உதவுகிறது. இது புதிய தலைப்புகள், கருத்துகள் ஆகியவற்றை எளிதாக வகைப்படுத்த அனுமதிக்கிறது, ஏனெனில் புதிய பண்புகளைச் சேர்க்கவோ இருக்கும் பண்புகளை விரிவுபடுத்தவோ இந்த வகைப்பாட்டில் வாய்ப்புள்ளது.
- **பகுப்பாய்வு-தொகுப்பு அணுகுமுறை:** இது நூலின் ஒவ்வொரு கூறினையும் தனித்தனியாகப் பகுப்பாய்வு செய்து, பின்னர் அவற்றை ஒரு தர்க்கரீதியான முறையில் தொகுக்கிறது. இதன்வழி ஒரு நூலின் பல பரிமாணங்கள் வெளிப்படவும் உதவுகிறது.
- **குறியீடுகளின் பயன்பாடு:** அரைப்புள்ளி புள்ளி, முக்காற் புள்ளி, புள்ளி போன்ற பல்வேறு குறியீடுகள் வெவ்வேறு பண்புகளைப் பிரிக்கவும், வகைப்பாட்டு எண்ணுக்குத் தெளிவைக் கொடுக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.
- **தகவல் மீட்டெடுப்பு:** கோலன் வகைப்பாட்டின்மூலம் பயனர்கள் ஒரு குறிப்பிட்ட தலைப்பைப் பற்றிய தகவல்களை, அதன் பல்வேறு கூறுகளின் (இடம், காலம், ஆற்றல் போன்றவற்றின்) அடிப்படையில் எளிதாக மீட்டெடுக்க உதவுகிறது.
- **பன்னாட்டு அங்கீகாரம்:** உலக அளவில் நூலகவியலாளர்கள் கோலன் வகைப்பாட்டை அதன் புதுமையான அணுகுமுறைக்காக அங்கீகரித்துள்ளனர்.

கோலன் வகைப்பாட்டில் இந்தியவியல் (Indology)

இந்தியவியல் என்பது இந்திய வரலாறு, பண்பாடு, மொழிகள், இலக்கியம், தத்துவம், சமயம் போன்ற பல்வேறு அறிவுத் துறைகள் உள்ளடக்கிய ஒரு பரந்த ஆய்வுப் புலமாகும். கோலன் வகைப்பாடு இந்த இந்தியவியல் துறைகளை வகைப்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளது.

கோலன் வகைப்பாட்டில் உள்ள 'பகுப்பாய்வு-தொகுப்பு' (Analytico-Synthetic) அணுகுமுறை இந்தியவியல் போன்ற சிக்கலான, பல்துறை சார்ந்த தலைப்புகளை வகைப்படுத்த மிகவும் பயனுள்ளதாக உள்ளது. PMEST (Personality, Matter, Energy, Space, Time) சூத்திரத்தைப் பயன்படுத்தி, ஓர் இந்தியவியல் நூலின் பல்வேறு கூறுகளையும் தனித்தனியாகப் பகுப்பாய்வுச் செய்து, பின்னர் அவற்றை ஒரு தர்க்கரீதியான முறையில் இணைத்து ஒரு துல்லியமான வகைப்பாட்டு எண்ணை உருவாக்க முடியும்.

குறிப்பாக, கோலன் வகைப்பாட்டின் மூன்றாவது பகுதி (Part 3) 'செவ்வியல் மற்றும் புனித நூல்கள்' (Classics and Sacred Books) வகைப்படுத்துவதைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறது. இது இந்தியச் செவ்வியல் நூல்களை வகைப்படுத்துவதற்குப் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

இத்துடன் இந்தியத் தத்துவங்கள், வேதங்கள், புராணங்கள், இந்தியக் கலைகள், இந்திய மொழிகள், இந்திய வரலாறு போன்ற தலைப்புகளைக் கோலன் வகைப்பாடு அதன் விரிவான அட்டவணைகளையும் PMEST சூத்திரத்தையும் பயன்படுத்தி துல்லியமாக வகைப்படுத்துகிறது. முனைவர் ரங்கநாதன், இந்திய அறிவு மரபை வகைப்படுத்துவதற்குத் தேவையான நுணுக்கங்களையும் பிரிவுகளையும் கோலன் வகைப்பாட்டில் இணைத்துள்ளார். இத்தகைய செயல்பாடுகளே அவர் 'இந்திய நூலகவியலின் தந்தை' என அழைக்கப்படுவதற்குக் காரணமாக அமைகின்றன.

கோலன் வகைப்பாட்டின் எல்லைகள்

- **சிக்கலான தன்மை:** PMEST சூத்திரம், குறியீடுகளின் பயன்பாடு ஆரம்பத்தில் நூலகவியலாளர்களுக்குக் கற்றுக்கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் சற்று சிக்கலாக இருக்கலாம்.
- **நேரம் எடுக்கும் செயல்முறை:** ஒரு நூலுக்குச் சரியான வகைப்பாட்டு எண்ணை உருவாக்க, அதன் ஒவ்வொரு பண்பையும் கவனமாகப் பகுப்பாய்வு செய்ய வேண்டும். இது நேரம் எடுக்கும் பணியாகும்.
- **ஒவ்வொரு பதிப்பிலும் மாற்றங்கள்:** கோலன் வகைப்பாட்டின் ஒவ்வொரு புதிய பதிப்பிலும் சில மாற்றங்கள் அல்லது புதுப்பிப்புகள் இருக்கும், இது நூலகவியலாளர்கள் தொடர்ந்து புதுப்பித்த நிலையில் இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

கோலன் வகைப்பாடு இன்றும் பொது நூலகங்களில் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக இந்தியவியல் துறைகளைக் கையாளும் நூலகங்களுக்கு மிகவும் பொருத்தமானதாகக் கருதப்படுகிறது. மேலும், இந்தியாவின் பெரும்பாலான நூலக அறிவியல் கல்வி நிலையங்களில் கோலன் வகைப்பாடு ஒரு முக்கியப் பாடத்திட்டமாக உள்ளது. கோலன் வகைப்பாடு இந்தியாவுக்கு வெளியே பெரிய அளவில் பயன்படுத்தப்படுவதில்லை. அதன் சிக்கலான தன்மை மற்றும் ஏற்கனவே உலகளவில் நிறுவப்பட்ட பிற வகைப்பாட்டுத் திட்டங்களின் ஆதிக்கம் காரணமாக, சர்வதேச அளவில் அதன் பயன்பாடு குறைவாகவே உள்ளது. இருப்பினும், டாக்டர் ரங்கநாதனின் பகுப்பாய்வு-இணைப்பு அணுகுமுறை மற்றும் முகப்பு வகைப்பாடு (Faceted Classification) போன்ற அவரது கோட்பாட்டுப் பங்களிப்புகள் உலகளாவிய நூலக அறிவியல் மற்றும் தகவல் அமைப்புக் கோட்பாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. கோலன் வகைப்பாடு, முனைவர் எஸ். ஆர். ரங்கநாதன் அவர்களின் தொலைநோக்குப் பார்வையையும் நூலக அறிவியலுக்கு அவர் அளித்த மகத்தான பங்களிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

TACE16: முழுமைபெறாத கனவு

ரஞ்சித் ரூஸோ, தமிழ் எழுத்துருக் கூடம், RMRL

முதன்மைச் சொற்கள்: அபுகிதா முறை, NHM Writer, Modular NXT Converter, PUA, தமிழ்99

ஜூலை மாதச் செய்திமடலில் யூனிகோடுக்குப் பதிலாக உருவாக்கப்பட்ட TACE16 என்ற குறியாக்க முறைக்கு ஓர் அறிமுகம் அளித்திருந்தேன். ஏன் TACE16 உருவாக்கப்பட்டது என்றும் அதற்கும் தமிழ் யூனிகோடுக்கும் உள்ள வித்தியாசங்களையும் விளக்கியிருந்தேன். இந்தக் கட்டுரை அதன் தொடர்ச்சியே. இந்தக் கட்டுரையில் TACE16 முறை எப்படி இயங்குகிறது, அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பார்ப்போம்.

TACE16 எப்படி இயங்குகிறது?

இது அசை அடிப்படையிலான (Syllabary-based) குறியாக்க அமைப்பாகும். வழக்கமான யூனிகோடு முறைப்படி ஒரு வடிவாக்கச் செயலியின் மூலம் மெய்யெழுத்துகள் மற்றும் உயிரெழுத்துகளை அதற்கான புள்ளி, கொக்கிகளை இணைத்து உருவாக்குவதற்குப் பதிலாக ஒவ்வொரு தமிழ் அசைக்கும் ஒரு தனித்துவமான குறியீட்டுப் புள்ளியை ஒதுக்குகிறது TACE16.

இந்தக் குறியீட்டுப் புள்ளிகள் யூனிகோடின் தனியார் பயன்பாட்டுப் பகுதியில் (PUA - Private Use Area) அமைந்துள்ளன. யூனிகோடில் வரையறுக்கப்படாமல் விடப்பட்டுள்ள இடம்தான் இந்தத் தனியார் பயன்பாட்டுப் பகுதி (PUA). யூனிகோடுடனான தனிப்பட்ட ஒப்பந்தத்தின் பெயரில் இந்தக் குறியீட்டுப் புள்ளிகள் வரையறை செய்யப்படுகின்றன. இது தரப்படுத்தப்பட்ட யூனிகோடு குறியீட்டுப் புள்ளிகளுடன் முரண்படாமலும் தனி குறியாக்க முறையாகச் செயல்படாமலும் யூனிகோடின் அடித்தளத்திலேயே இயங்க உதவுகிறது.

TACE16 எழுத்துத் தொகுப்பில், தமிழ் உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள், உயிர்மெய்யெழுத்துகள், உயிர் அகரமெய், உயிர் உகரமெய் போன்ற உயிரெழுத்து-மெய்யெழுத்து சேர்க்கைகள் அனைத்திற்கும் தனித்தனி குறியீட்டுப் புள்ளிகள் வழங்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, யூனிகோட் தரநிலையில், 'கி' (கி) என்ற எழுத்து பொதுவாக 'க' (U+0B95) என்ற மெய்யெழுத்தும் 'ி(U+0BBF) என்ற இகர கொக்கியும் ஒன்றுசேர்த்து உருவாக்கப்படுகிறது. TACE16 இல், 'கி' என்பது U+E213 என்ற தனித்துவமான குறியீட்டுப் புள்ளியைக் கொண்டுள்ளது. இந்த முறையைப் பயன்படுத்துவதில் யூனிகோடில் இருக்கும் பின்னடைவுகளைத் தவிர்க்கமுடியும். ஆனால், யூனிகோடின் தரநிலைப்படுத்தப்பட்ட தமிழ் இன்னும் அபுகிதா முறையிலேயே இருக்கிறது என்பதால் TACE16 பயன்படுத்துவதற்கு நமக்கு அதற்கென்ற தனி எழுத்துருவும், உள்ளீட்டு முறை மாற்றியும் தேவை.

எப்படிப் பயன்படுத்துவது?

TACE16-யைப் பயன்படுத்த, அதற்கு ஒத்துப்போகும் எழுத்துருகள் மற்றும் உள்ளீட்டு முறை மாற்றிகளைப் பதிவிறக்கி இன்ஸ்டால் செய்யவேண்டும். அதிகாரபூர்வமாக தமிழ்நாடு அரசின்

Vowels→		∅	A	Ā	I	Ī	U	Ū	E	Ē	Ai	O	Ō	Au	(Miscellaneous)		
Consonants ↓		_0	_1	_2	_3	_4	_5	_6	_7	_8	_9	_A	_B	_C	_D	_E	_F
(Symbols)	U+E10_	௳	௴	௵	௶	௷	௸	௹	௺	○	•	★	ராஜ	ௐ			
(Numbers)	U+E18_	௦	௧	௨	௩	௪	௫	௬	௭	௮	௯	௰	௱	௲			
(Fractions)	U+E1A_	ஹு	உ	ஒ	ஜ	கூ	ப	ஙூ	சு	ப	ஊ	ஈ	சு	வுத	ரி	ஃ	ஙூ
∅	U+E1F_	◌்		◌ா	◌ி	◌ீ	◌ு	◌ூ	ெ◌	ே◌	ை◌	ெ◌ா	ே◌ா	ெ◌ள			
∅	U+E20_		அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ		
K	U+E21_	க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ			
Ng	U+E22_	ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ			
C	U+E23_	ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ			
Ñ	U+E24_	ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ			
Ṭ	U+E25_	ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ			
Ṇ	U+E26_	ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ			
T	U+E27_	த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ			
N	U+E28_	ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ			
P	U+E29_	ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ			
M	U+E2A_	ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ			
Y	U+E2B_	ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ			
R	U+E2C_	ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ			
L	U+E2D_	ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ			
V	U+E2E_	வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ			
Ḻ	U+E2F_	ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ			
Ḷ	U+E30_	ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ			
Ṟ	U+E31_	ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ			
Ṉ	U+E32_	ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ			
Grantha characters																	
J	U+E33_	ஜ்	ஜ	ஜா	ஜி	ஜீ	ஜு	ஜூ	ஜெ	ஜே	ஜை	ஜொ	ஜோ	ஜௌ			
Sh	U+E34_	ஶ்	ஶ	ஶா	ஶி	ஶீ	ஶு	ஶூ	ஶெ	ஶே	ஶை	ஶொ	ஶோ	ஶௌ			
Ṣ	U+E35_	ஷ்	ஷ	ஷா	ஷி	ஷீ	ஷு	ஷூ	ஷெ	ஷே	ஷை	ஷொ	ஷோ	ஷௌ			
S	U+E36_	ஸ்	ஸ	ஸா	ஸி	ஸீ	ஸு	ஸூ	ஸெ	ஸே	ஸை	ஸொ	ஸோ	ஸௌ			
H	U+E37_	ஹ்	ஹ	ஹா	ஹி	ஹீ	ஹு	ஹூ	ஹெ	ஹே	ஹை	ஹொ	ஹோ	ஹௌ			
Kṣ	U+E38_	க்ஷ்	க்ஷ	க்ஷா	க்ஷி	க்ஷீ	க்ஷு	க்ஷூ	க்ஷெ	க்ஷே	க்ஷை	க்ஷொ	க்ஷோ	க்ஷௌ	ஸ்ரீ		

TACE 16 குறியீட்டுப் புள்ளி

தமிழ் இணையக் கல்விக்கழகம், இந்தக் கருவிகளை உருவாக்கி அவற்றை இணையத்தில் பதிவிறக்கம் செய்யும்படி கொடுத்துள்ளது (https://www.tamilvu.org/ta/tkbd-index-341488). இதன் மூலம் மொத்தம் ஐந்து எழுத்துருகளை மட்டுமே தற்போது பயன்படுத்த இயலும்.

TACE16 எழுத்துருவில் தட்டெச்சு செய்யவேண்டும் என்றால் தமிழ்99 அல்லது தமிழ்த் தட்டச்சு முறை ஆகிய இரண்டு வகையான விசைப்பலகைகளை மட்டுமே பயன்படுத்த இயலும். வேறு விசைப்பலகை முறைகளைப் பயன்படுத்தும்போது இந்த மாற்றிகள் இயங்காது.

NHM Writer, Modular NXT Converter போன்ற சில மென்பொருள்களில் TACE16 முறை தரப்பட்டுள்ளது. ஆனால், இவர்கள் TACE16 எழுத்துருக்களை உருவாக்கவில்லை.

சவால்கள்

யூனிகோடு தரநிலைக்கு ஒரு மாற்று முறையாக TACE16 முன்னிறுத்தப்பட்டாலும் இதற்கென்று சில சவால்கள் உண்டு. அதில் முதல் சவால் இடைச்செயல்பாடு. TACE16 மூலம் உருவாக்கப்பட்ட ஆவணத்தை அதற்கான எழுத்துருவின்றி படிக்க இயலாது. தற்போது மொத்தம் 5 எழுத்துருகளே இருக்கும் நிலையில் இதன் பயன்பாடு என்பது மிகவும் சுருக்கப்பட்டதாக உள்ளது.

வலைதளங்கள் மற்றும் மொபைல் பயன்பாடுகளுக்கு யூனிகோடு மட்டுமே தற்போது தரநிலையாக இருக்கிறது. வலை உளாவிகளிலும், கைபேசிகளிலும் TACE16 பயன்படுத்துவதற்கான தனி எழுத்துருகளை எம்பெட் செய்யவேண்டும். இது நம் கையில் இல்லை. அந்தந்த மென்பொருள் உருவாக்கும் வல்லுநர்களோ அல்லது நிறுவனங்களோ மேற்கொள்ளவேண்டிய முயற்சி.

தமிழ்நாடு அரசு TACE16–யைத் தமிழுக்கான ஒரு மாற்று தரநிலையாக அறிவித்திருந்தாலும் இவை அரசு துறைகளுக்குள் பயன்படுத்தவும், ஆவணப்படுத்தவும் மட்டுமே இதுவரை பயன்படுத்தப்படுகிறது. பரந்த தகவல் தொடர்புக்கான தரநிலையாக இன்னும் யூனிகோடு மட்டுமே செயல்படுகிறது.

யூனிகோடு தரநிலை வழங்கும் உலகளாவிய இணக்கத்தன்மையை விட்டுக்கொடுத்து தமிழின் உண்மையான பிரிதிநிதித்துவத்திற்கு மதிப்பளித்து TACE16–யைப் பயன்படுத்துவது ஒவ்வொரு தனிநபரின் உணர்வு சார்ந்து எடுக்கும் முடிவே. தற்போது வரை TACE16 என்பது ஒரு குறிப்பிட்ட சூழலுக்குள் மட்டுமே இயங்குகிறது. தமிழுக்கான உலகளாவிய முதன்மை யூனிகோடு தரநிலையாக TACE16 மாறும்வரை அதன் உருவாக்கத்தின் காரணம் முழுமையடையாது.

AUGUST 2025 |VOL.2, ISSUE NO. 8

அறிவியல் முறையில் காகிதப் பாதுகாப்பு

மா. மணிகண்ட சுப்பு, துணை இயக்குநர், RMRL

முதன்மைச் சொற்கள்: Conservation, நூல்பாதுகாப்பு, காகிதம், டாடா அறக்கட்டளை, பயிற்சி



தகவல் சேமிப்பு என்பது காலத்தின் தேவை. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் இன்றும் நமக்குக் கிடைக்கின்றன. கல்வெட்டுகள், செப்புத் தகடுகள் போன்றவை காலத்தைக் கடந்து நின்றாலும், அவற்றை உருவாக்க அதிக நேரமும் உழைப்பும் தேவைப்பட்டன. மேலும், அவை இலக்கண இலக்கியங்களைப் பதிவுசெய்வதற்கு ஏற்றவையாக இல்லை. அதிக அளவில் தகவல்களைப் பதிவு செய்ய பண்டைய காலத்தில் ஓலைச்சுவடிகளே சிறந்தவையாக அமைந்திருந்தன. சங்க இலக்கியங்கள், சமய இலக்கியங்கள், சித்த மருத்துவம், இலக்கண நூல்கள் எனப் பல இலக்கியங்கள் யாவும் நமக்கு ஓலைச்சுவடிகள் மூலமாகவே கிடைக்கின்றன. தகவல் சேமிப்பின் அடுத்தக்கட்டமாக நாம் காகிதத்தின் பயன்பாட்டையும் அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பையும் கூறலாம். அச்சு இயந்திரம் மூலமாக குறைந்த நேரத்தில் அதிகளவில் நூல்களை அச்சிட முடிந்தது. இது ஓலைச்சுவடியில் சாத்தியமில்லை. எனவே, காகிதம் ஒரு வகையில் அறிவைப் பரவலாக்கி, ஜனநாயகப்படுத்தியது எனக் கூறலாம். சீனாவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக காகிதம் புழக்கத்தில் இருந்து வருகிறது. இந்தியாவில் காகிதம் 14ஆம் நூற்றாண்டிலேயே பயன்படுத்தப்பட்டதாக அறியப்படுகிறது. நேபாளம், பூட்டான் வழியாக காகிதத் தொழில்நுட்பம் காஷ்மீருக்கு

வந்தடைந்தது. இத்துடன் பஞ்சாப், மகாராஷ்ட்ரம் போன்ற இடங்களிலும் 15ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே காகிதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. முகலாயர் காலத்தில் மகாராஷ்ட்ரத்தின் காக்சிபுரா என்ற இடத்தில் காகிதங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப காலங்களில் பெரும்பாலும் அரசாங்க நிர்வாகப் பணிகளுக்கு மட்டுமே காகிதங்கள் பயன்படுத்தப்பட்டன.

இந்தியாவில் முதல் இயந்திர காகித ஆலை பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் நிறுவப்பட்டது. இதன் பின்னர்தான் நூல்களின் எண்ணிக்கை அதிகரித்ததை நாம் அறிய முடிகிறது. நூல்கள் தவிர தமிழ் இதழ்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வரத் தொடங்கின. இவைதவிர, வணிகக் கணக்கு வழக்கிற்காகவும் அஞ்சல் கடிதங்களுக்காகவும் காகிகத்தைப் பயன்படுத்தினர்.

பதினெட்டாம் நூற்றாண்டு தொடங்கி தற்போது வரை, கிட்டத்தட்ட 300 ஆண்டு காலம் காகித்தால் ஆன நூல்கள் இதழ்கள் குறிப்பேடுகள், நோட்டுப் புத்தகங்கள், கடிதங்கள், அலுவல் குறிப்புகள், பல தரப்பட்ட ஆவணங்கள் (அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள், ரசீதுகள் போன்றவை) நம்மிடம் உள்ளன. இவைகளைச் சீர்செய்து பாதுகாக்க வேண்டிய கடமை நமக்கு உள்ளது. ஏனென்றால், காகித ஆவணங்களைப் பாதுகாப்பது என்பது நம் வரலாற்றை, நம் சமூகத்தின் அறிவைப் பாதுகாப்பது.

ஆனால் காகிதப் பாதுகாப்பு மிகச்சிக்கலானது. ஏனென்றால், காகிதம் என்பது எளிதில் கிழியும், உடையும் தன்மையுடையது. காகிதம் நுண்ணிய நார்களால் உருவானது. இந்த நார்களிடையேயுள்ள இணைப்புத்தன்மையைப் பொறுத்தே காகிதத்தின் பலமும் ஆயுளும் அமையும். இத்துடன் காகித ஆவணங்கள் பாதுகாக்கப்படும் விதம், கையாளப்படும் விதம் ஆகியவையும் இவ்வாவணங்களின் ஆயுளைத் தீர்மானிக்கும். பொதுவாக நூல்கள், இதழ்கள் போன்றவற்றில் பயன்படுத்தும் காகிதங்கள் அதன் ஆயுளைக் கணக்கில் வைத்துத் தயாரிக்கப்படுவதில்லை. வியாபார லாபத்தையும், ஆவணங்களின் அழகியலையும், பயன்பாட்டையும் மட்டுமே கவனத்தில் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. தாள்கள் வெள்ளையாக இருக்கவேண்டும் எனக் காகித ஆலைகளில் அமிலங்களும் பல வேதிப்பொருட்களும் சேர்க்கப்படுகிறது. இதனால் தாள்கள் தயாரிக்கப்பட்ட சில நாள்களிலேயே மஞ்சள், பழுப்பு நிறமாக மாறி, காகிதம் உடையத் தொடங்குகிறது. மேலும், நாம் பயன்படுத்தும்போது கொடுக்கும் அழுத்தம் காரணமாகவும், புறச்சூழலில் உள்ள பிராணவாயு, ஈரப்பதத்துடன் வினைப்புரிந்தும் காகிதம் உடையத் தொடங்குகிறது.

காகித ஆவணங்களைப் பாதுகாக்க இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன. முதலாவது, ஆவணங்கள் சேதமடைவதைத் தடுப்பது. ஆவணங்களைச் சரியான முறையில் கையாள்வது, சீரான தட்பவெட்பநிலையும் சரியான ஈரப்பதம் கொண்ட அறையில் அமிலத்தன்மை பாதிக்காதவாறு வைப்பதன் மூலமாக காகித ஆவணங்களைப் பாதுகாக்கலாம். மேலும், ஆவணங்களைப் பூச்சிகளிடமிருந்தும் பாதுகாக்க வேண்டும். இதற்கு இயற்கைப் பூச்சி விரட்டிகளைப் பயன்படுத்தலாம்.

இரண்டாவது, பாதிப்படைந்த ஆவணங்களைச் சீர்செய்து பாதுகாப்பது. இதற்கு உழைப்பும் நேரமும் பணமும் அதிகம் தேவைப்படும். மேலும் நன்கு பயிற்சிபெற்ற காகிதப் பாதுகாப்பில் தேர்ந்த நிபுணர்களால் மட்டுமே ஆவணங்களைச் சரியான முறையில் சீர்செய்ய முடியும். ஆவணங்களைச் சீர்செய்வதில் உள்ள சில சிக்கல்களைக் காணலாம்:

1. நூல்கள், இதழ்கள், ஒற்றைக் காகித ஆவணங்கள் என ஒவ்வொரு ஆவணத்தையும் தனித்தனிப் பாதுகாப்பு முறையில் சீர்செய்ய வேண்டும். இதைத் தீர்மானிப்பதற்குப் போதுமான பயிற்சி தேவை.

2. மையால் எழுதப்பட்ட ஆவணங்களுக்குத் தனி கவனம் தேவை. அவற்றைச் சீர்செய்யும்போது மை அழிந்துபோகாமல் பாதுகாக்க வேண்டும்.

3. ஆவணங்கள் சீர்செய்ய முற்படும்போது அவை மேலும் சேதம் அடையாமல் கவனத்துடன் பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. காகிதப் பாதுகாப்பிற்குத் தேவையான பெரும்பாலான பொருட்கள் வெளிநாடுகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே, அவற்றை வாங்கவும் இறக்குமதி செய்யவும் அதிகச் செலவாகும்.

5. பெரும்பாலான சீர்செய்யும் முறைகள் அயல்நாடுகளில் உள்ள காலநிலையின் அடிப்படையிலேயே சோதனை செய்யப்பட்டவை. அம்முறைகள் இந்தியா போன்ற வெப்பமண்டல நாட்டில் அப்படியே செயல்படுத்த முடியாது. எனவே, நமது காலநிலைகளுக்கு ஏற்றவாறு அம்முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையும் உள்ளது.

தமிழ் ஆவணங்களைப் பாதுகாக்க ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் காகிதப் பாதுகாப்புக் கூடம் செயல்பட்டு வருகிறது. இக்கூடம் அமைப்பதற்காக நூலக இயக்குநர் முனைவர் சுந்தர் கணேசன் அவர்கள் இங்கிலாந்து சென்று முறையாக பயிற்சி பெற்று வந்தார். இந்தக் கூடத்தில் அனைத்துவிதமான காகித ஆவணங்களும் சீர்செய்யப்படுகின்றன. ஒரே ஒரு பாதுகாப்பு அலுவலருடன் இயங்கி வந்த இந்தப் பாதுகாப்புக் கூடத்திற்கு, 2015ஆம் ஆண்டு டாடா அறக்கட்டளை 60,000 பக்கங்களைச் சீர்செய்யும் திட்டப்பணிக்கு நிதி உதவி அளித்தது. இந்த நிதியைக் கொண்டு காகிதப் பாதுகாப்புக்கு தேவையான கருவிகளும் பொருட்களும் வாங்கப்பட்டு இரண்டரை ஆண்டுகளாக இப்பணி மேற்கொள்ளப்படுகிறது. இந்தத் திட்டப்பணியில் மொத்தம் ஐந்து பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, காகிதப் பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாண்டு (2025) மீண்டும் ஒரு திட்டப்பணிக்கு டாடா அறக்கட்டளை நிதி அளித்துள்ளது. இத்திட்டப்பணிக்காக நான்கு பணியாளர்கள் இந்தியாவில் உள்ள பல நிறுவனங்களுக்குச் சென்று காகிதப் பாதுகாப்பின் நவீன முறைகளில் பயிற்சியைப் பெற்று வருகின்றனர். அதில் ஒருவர் காகிதத்துடன் புகைப்படங்களைப் பாதுகாக்கவும் சீர்செய்யவும் பயிற்சிபெற்று வருகிறார். அடுத்த ஆண்டு முதல் பல்வேறு நிறுவனங்களில் உள்ள ஆவணக்காப்பாளர்களுக்கும், நூலகர்களுக்கும், நூல் சேகரிப்பாளர்களுக்கும் காகிதப் பாதுகாப்புப் பயிற்சி அளிக்க உள்ளோம். இதன்மூலம் அறிவியல்பூர்வமான காகிதப் பாதுகாப்பு பயிற்சியையும் கூடவே காகிதப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வையும் மக்களிடையே ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

ரோஜா இதழ்

சு. அருண் பிரசாத், உதவி ஆசிரியர், பதிப்புகள், RMRL



தை | Jan 2012

A quaterly newsletter from the Roja Muthiah Research Library
ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் காலாண்டிதழ்

rōjā ital

ரோஜாஇதழ்

முதல் பதிப்புகள் குறித்த அறிமுகம்
03 1887 இல் பதிப்பிக்கப்பட்ட கலித்தொகைப் பதிப்பிலிருந்தே சங்க இலக்கிய பதிப்புகள் தொடங்குகின்றன.

அறிஞர் மு. அருணாசலம் அவர்களின் நூல் சேகரிப்புகள்
04 அறிஞர் மு. அருணாசலத்தின் புலமைச் செயல்பாட்டின் அடையாளமாக அவரது நூலகம்.

சிந்துவெளி ஆராய்ச்சி - ஓர் அறிமுகம்
07 சிந்துவெளிக் குறியீடுகளின் கட்டமைப்பு இலக்கண முறைப்படி அமைக்கப்பட்ட ஒரு மொழியின் அமைப்பு போன்று உள்ளதாக அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

02 ரோஜா முத்தையா ஒரு தங்கப் புதையல் — பொ. வேல்சாமி
03 ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திலிருக்கும் முதல் பதிப்புகள் குறித்த அறிமுகம்: 1 — அ. சதீஷ்
04 ரோஜா முத்தையா நூலகத்தில் அறிஞர் மு.அருணாசலம் அவர்களின் நூல் சேகரிப்புகள் — வீ. அரசு
06 நூலகத்தின் நிகழ்வுகள்
07 சிந்துவெளி ஆராய்ச்சி - ஓர் அறிமுகம் — ச. சுப்பிரமணியன்
08 ரோஜா முத்தையா நூலக நூற்பட்டியல் — இரா. பிரகாஷ்

ஆசிரியர் குழு

வ. கீதா
அ. சதீஷ்
சு. தியடோர் பாஸ்கரன்
க. சுந்தர்

மறுசுழற்சி செய்யப்பட்ட தாளில் அச்சிடப்பட்டுள்ளது

தை பிறக்கும் வேளையில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் ‘ரோஜா இதழ்’ மலர்ந்திருக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த செய்தி மடலை கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் இப்பொழுது நிறைவேறியுள்ளது.

இந்த வேளையில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் கடந்து வந்த பாதையை எண்ணிப் பார்க்கையில் மகிழ்ச்சியாக உள்ளது. 1994ஆம் ஆண்டு 1,00,000 ஆவணச் சேகரிப்புகளுடன் தொடங்கப்பட்ட இந்நூலகம் இன்று 3,00,000 ஆவணங்களுடன் இந்தியாவின் ஒரு முன் மாதிரி நூலகமாக பல துறைகளில் திகழ்கிறது. இந்த 17 ஆண்டுகளில் சிகாகோ பல்கலைக்கழகம், பிரிட்டிஷ் நூலகம், வெல்கம் அறக்கட்டளை நூலகம் மற்றும் இந்தியாவில் மும்பையில் உள்ள டாடா நிறுவனம், சென்னையில் உள்ள கணித அறிவியல் நிறுவனம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறது. மேலும் சர்வதேச தரத்தில் புத்தகப் பாதுகாப்பு, நூற்பட்டியல் தயாரித்தல் ஆகிய துறைகளில் நவீன உத்திகளை கையாண்டு வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளாக கருத்தரங்குகள், மாதமொரு சொற்பொழிவு, ஆண்டிற்கு குறைந்தது ஒரு கண்காட்சி மற்றும் பயிற்சிப் பட்டறைகள் என பல பணிகளில் ஈடுபட்டு வருகிறது. 2007ஆம் ஆண்டு முதுமுனைவர் ஐராவதம் மகாதேவன் அவர்களின் ஆலோசனைப்படி **சிந்துவெளி பண்பாட்டு ஆய்வு மையத்தை** நிறுவி அதன் ஊடாக சிந்துவெளி தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

ரோஜா இதழில் நூலகத்தில் நடந்த, நடக்கவிருக்கின்ற நிகழ்வுகள் மட்டுமல்லாது அரிய ஆவணங்கள் தொடர்பான கட்டுரை, புத்தக மதிப்புரை, பிற நூலகங்களை பற்றிய தகவல்கள், அரிய தொகுப்புகள் பற்றிய குறிப்புகள், சிந்துவெளி நாகரிகம் தொடர்பான கட்டுரைகளும் இடம் பெற உள்ளது. இந்த கட்டுரைகளை ஆய்வாளர்கள், அறிஞர்கள், நூலகவியல் நிபுணர்கள் மற்றும் புத்தக பாதுகாப்பாளர்கள் ஆகியோர் எழுத உள்ளனர். ரோஜா இதழை தற்பொழுது காலாண்டு இதழாக வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அறிஞர் மு. அருணாசலம் அவர்களின் நூலகத் தொகுப்பு அண்மையில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இது ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திற்கு மட்டுமல்லாமல் தமிழியல் ஆராய்ச்சியாளர்கள் கொண்டாடுவதற்கான தருணம். இதைப் பதிவு செய்யும் வகையில் பேராசிரியர் வீ. அரசு அவர்களின் கட்டுரை இந்த இதழில் வெளியாகியுள்ளது. ரோஜா முத்தையா என்ற ஒருவர் இல்லை என்றால் இந்த ரோஜா இதழும் இன்று இல்லை. அவரை நினைவு கூறும் வகையில் எழுத்தாளர் பொ. வேல்சாமி அவர்களின் கட்டுரையும், ரோஜா முத்தையா நூலகத்திலிருக்கும் முதல் பதிப்புகளின் வரலாற்றை பதிவு செய்யும் வகையில் முனைவர். அ. சதீஷ் அவர்களின் கட்டுரையும், சிந்துவெளி ஆய்வு தொடர்பாக சிந்துவெளி ஆராய்ச்சியாளர் ச. சுப்பிரமணியன் அவர்களின் கட்டுரையும் நூலகத்தின் நூற்பட்டியல் பற்றி நூற்பட்டியல் நிபுணர் இரா. பிரகாஷ் அவர்களின் கட்டுரையும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளது. இவை படிப்பவர்களுக்கு அரிய தகவல்களை கொண்டு சேர்ப்பதோடு நூலக பயன்பாட்டாளர்களுக்கு பயனுள்ளதாகவும் இருக்கும் என நம்புகிறோம். நூலகத்தின் சார்பாக அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்தைத் தெரிவித்து கொள்கிறேன்.

க. சுந்தர்

இன்று மின்மடலாக வெளியாகும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் செய்திமடல், முன்பு அச்சு மடலாக சில காலம் வெளிவந்ததை நீங்கள் அறிவீர்களா?

“தை பிறக்கும் வேளையில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் ‘ரோஜா இதழ்’ மலர்ந்திருக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த செய்தி மடலை கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் இப்பொழுது நிறைவேறியுள்ளது.” - என நூலகத்தின் இயக்குநர் சுந்தர் கணேசன் ரோஜா இதழை (ஜனவரி 2012) அறிமுகப்படுத்துகிறார்.

செய்திமடலின் நோக்கம் பற்றி, “ரோஜா இதழில் நூலகத்தில் நடந்த, நடக்கவிருக்கின்ற நிகழ்வுகள் மட்டுமல்லாது அரிய ஆவணங்கள் தொடர்பான கட்டுரை, புத்தக மதிப்புரை, பிற நூலகங்களை பற்றிய தகவல்கள், அரிய தொகுப்புகள் பற்றிய குறிப்புகள், சிந்துவெளி நாகரிகம் தொடர்பான கட்டுரைகளும் இடம் பெற உள்ளது. இந்த கட்டுரைகளை ஆய்வாளர்கள், அறிஞர்கள், நூலகவியல் நிபுணர்கள் மற்றும் புத்தக பாதுகாப்பாளர்கள் ஆகியோர் எழுத உள்ளனர். ரோஜா இதழை தற்பொழுது காலாண்டு இதழாக வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது,” என இயக்குநர் கூறுகிறார்.

மறுசுழற்சி செய்யப்பட்ட தாளில் அச்சிடப்பட்டு வெளியான செய்திமடல், இன்று மின்மடலாக வெளிவந்துகொண்டிருக்கிறது. அச்சிதழாக வெளிவந்த ரோஜா இதழ்களை விரைவில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் மின்னூலகத்தில் வாசிக்கலாம்.

தமிழில் கலைச்சொற்கள்

தொன்மையும் தொடர்ச்சியும் கொண்டது தமிழ் மொழி. வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் சார்ந்த கலைச்சொற்களையும் பல்துறைச் சார்ந்த கலைச்சொற்களையும் தமிழ்ப்படுத்துதலும் தமிழிலேயே பயன்படுத்துதலும் தேவையாக உள்ளது. இது தமிழின் வளமைக்கும் செழுமைக்கும் பங்களிப்பதோடு, நவீனகாலத் தமிழ் மொழியின் இயங்குமுறைக்கும் முன்னேற்றத்திற்கும் பங்களிப்பாக அமையும். அதன்படி, தொடர்ந்து பல்துறை சார்ந்த ஆங்கிலக் கலைச்சொற்களுக்கு நிகரான தமிழ்க் கலைச்சொற்களை இப்பகுதியில் வெளியிட்டு வருகிறோம். அந்த வகையில் காகிதப் பாதுகாப்பு / ஆவணப் பாதுகாப்பு சார்ந்த சில கலைச்சொற்களை இங்கே பகிர்கிறோம்.

1. Handmade paper - கைவினைக் காகிதம்
2. Acid-free paper - அமிலமில்லாக் காகிதம்
3. Deacidification - அமில நீக்கம்
4. Acid-free adhesive - அமிலமில்லாப் பசை
5. Dehumidification - ஈரப்பதம் அகற்றல்
6. Relative humidity - ஒப்பு ஈரப்பதம்
7. Acid / Alkaline Paper - அமில / காரக் காகிதம்
8. Leaf casting - காகிதக்கூழ் வார்ப்பு
9. Brittle paper - முரியும் காகிதம்*
10. Lining - தாளொட்டுதல்

* Courtesy - முரியல் muriyal , n. < முரி[1]- That which is brittle; எளிதில் முரிவது. (Tamil lexicon)

தமிழ் அறிவு வளாகத்திற்கு நன்கொடை அளிக்க விரும்புபவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள வங்கி கணக்கில் நன்கொடை அளிக்கலாம்.

Roja Muthiah Research Library Trust-Building Fund
Current A/C No. 42625211182
State Bank of India, Tidel Park Branch
4, Canal Bank Road, Taramani, Chennai 600113
Branch Code: 04285 / IFS Code: SBIN0004285

அயலகத்தில் வாழ்பவர்கள் நன்கொடை அளிக்க தொடர்பு கொள்ளவும்:
8015312686 (WhatsApp)

Upcoming events at RMRL

05 - 08 - 2025, 5.30 pm: New Wedding format integrating Tamil Indigenous Practices

In this presentation Supanki Kalanadan, shares her work in researching and reviving Indigenous Tamil wedding traditions, rooted in ancient Tamil literature and cultural practices. Drawing on sources such as Tolkāppiyam and Kuruntokai.

16 - 08 - 2025, 10 am: அச்சுப் பண்பாடு - இதழ்கள் கண்காட்சி தொடக்கம்

சென்னை வாரத்தை முன்னிட்டு ஆகஸ்ட் 16 முதல் 22 வரை அச்சுப் பண்பாடு - இதழ்கள் சார்ந்த கண்காட்சி நூலகத்தில் ஒருங்கிணைக்கப்படுகிறது. கண்காட்சியின் நேரம் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை. பார்வையிடுவதற்கு முன்பதிவோ, கட்டணமோ கிடையாது.

21 - 08 - 2025, 5.30 pm: ஐரோப்பியத் தமிழ் ஆவணங்களை உலகமயமாக்கலின் தேவை

உரையாளர்கள்: முனைவர் க. சுபாஷிணி, தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

22 - 08 - 2025, 5.30 pm: அச்சுப் பண்பாடு - இதழ்கள் கண்காட்சி நிறைவு விழா சொற்பொழிவுகள்

உரையாளர்: எஸ். ராமகிருஷ்ணன், விஜயசங்கர் ராமச்சந்திரன், ஆதி வள்ளியப்பன்

26 - 08 - 2025, 5.30 pm: உரைவெளி: Fortune Seekers

Author Raman Mahadevan discuss his recent book on the business history of Nattukottai Chettiars with Economist M Vijayabaskar & Charted Civil Engineer Mu. Ramanathan.